

කාර්ය සාධන වාර්තාව 2021
செயல் நிறைவேற்ற அறிக்கை 2021
Performance Report 2021

පසුගාමී ග්‍රාමීය ප්‍රදේශ සංවර්ධන සහ ගෘහාශ්‍රිත සත්ත්ව පාලන හා සුළු ආර්ථික භෝග වගා ප්‍රවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

State Ministry of Backward Rural Areas Development and Promotion of Domestic Animal Husbandry & Minor Economic Crop Cultivation

செயல் நிறைவேற்ற அறிக்கை 2021

இலக்கம் 2196/27 மற்றும் 2020.10.06 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவாக விவசாய அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சுஇ இலக்கம் **2277/53** மற்றும் **2022.04.28** ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிக்கு அமைவாக விவசாய அமைச்சின் கீழ் கிராமிய பொருளாதாரப் பயிர்ச் செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சாக மாற்றப்பட்டது. பின்னர் விவசாய அமைச்சின் கீழ் கிராமிய பொருளாதாரப் பயிர்ச் செய்கை மற்றும் மேம்பாட்டுப் பிரிவாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த அறிக்கையின் மூலம் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை முன்வைக்கப்பட்டுள்ளது. **(தலைப்பு 407)**

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

6 மற்றும் 7 ஆம் மாடி, தபால் தலைமையகக் கட்டிடம்
310, டீ. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

உள்ளடக்கம்

பக்க இல.

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தோற்றப்பாடு / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1	அறிமுகம்	1
1.2	நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்	1 - 2
1.3	பிரதான பணிகள்	2
1.4	நிறுவன ஒழுங்கமைப்பு	3
1.5	அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்	4 - 5

அத்தியாயம் 02 – முன்னேற்றமும், எதிர்கால நோக்கும் 6 -14

அத்தியாயம் 03 – ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை 15 – 25

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள் 26

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான செயலாற்றுகை 27- 28

அத்தியாயம் 06 – மனிதவளங்களின் தோற்றப்பாடு 29

அத்தியாயம் 07 – இயைபு அறிக்கை 30 - 37

இணைப்புக்கள்

- ❖ இணைப்பு – 01 38
- ❖ இணைப்பு – 02 39
- ❖ இணைப்பு – 03 40 - 42

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

அத்தியாயம் 01. நிறுவனத்தின் தோற்றப்பாடு / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

2020.10.06 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2196/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு விசேட பல நோக்கங்களுக்காக அடுத்துவரும் சில ஆண்டுகளில் அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் நேர்வரிசை அமைச்சான கமத்தொழில் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற ஒரே நிறுவனமாக "இலங்கை ஹதபிம அதிகாரசபை" உள்ளது.

திணைக்களங்கள், நியாயாதிக்க நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்	அமுல்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும், சட்டவிதிகளும்
தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அதிகாரசபை	- அரச கமத்தொழில் கூட்டிணைத்தல் கூட்டுத்தாபனச் சடடம் (1972 இன் 11 ஆம் இலக்கம்)

1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

அமைச்சு

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

நோக்கு

கிராமிய குறைந்த வசதிகளைக் கொண்ட மக்களின் வாழ்க்கைக்குப் பலம்

செயற்பணி

முறையான முகாமைத்துவத்தைக் கொண்ட மக்கள் வாழ்க்கையை உருவாக்கும் நோக்கத்துடன், தனித்த மற்றும் கூட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம், பின்தங்கிய கிராம பிரதேச மக்களுக்கான புதிய வாழ்வாதார வழிமுறைகளை ஏற்படுத்தி, சமூக மற்றும் பொருளாதார ரீதியாக தனியே எழுந்திருக்கக்கூடியவகையில் வலுவூட்டி, முன்னேற்றத்தின் வழிவகைகளை உருவாக்கிக் கொள்வதற்கான பங்களிப்பை வழங்குதல்.

நோக்கங்கள்

1. சுயதொழில் வாய்ப்புக்கான வழிவகைகளை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்வாதார வழிவகைகளை மேம்படுத்தல்.

2. கிராமிய உற்பத்திகளை மேம்படுத்துவதன் மூலம் தேசிய உற்பத்திக்குப் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

3. கிராமிய மக்களின் போசாக்கு நிலைமையை மேம்படுத்தல்.

4. புத்தாயிரமாம் ஆண்டின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கின் இலக்குகளை அடைந்துகொள்ளல்.

5. உள்நாட்டு சிறு பொருளாதார பயிர்ச் செய்கையை கட்டியெழுப்புவதன் மூலம் இறக்குமதியை நிறுத்தி அந்நியச் செலாவணியை சேமித்துக் கொள்ளல்.

6. உள்நாட்டு சிறு பொருளாதார பயிர்ச் செய்கை தொடர்பிலான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஏற்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

7. துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான மக்களை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

1.3 முக்கிய பணிகள்

(1) விசேட பூகோள பண்புகளைக் கொண்டுள்ள பிரதேசங்களில் பயிரிடக்கூடிய மஞ்சள், உழுந்து, இஞ்சி, உள்நாட்டு கிழங்கு வகைகள் போன்ற சிறு பயிர்செய்கைகளை வீடுகளை அண்மித்த காணிகளில் பயிர் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.


(2) வீடுகளில் ஆடு, கோழிகளை வளர்ப்பதற்காக கால்நடைவள அபிவிருத்திக் கருத்திட்டச் சேவைகளை முறையாகப் பெற்றுக் கொடுத்தல்.

(3) நிதி நிறுவனங்கள், தொழில்நுட்பச் சேவை நிறுவனங்கள், அடிப்படை உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்களை வழங்குவோரை இனங்கண்டு அதன் மூலம் சிறு பயிர்செய்கை சந்பந்தமான வீட்டு உற்பத்திகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதை ஒருங்கிணைப்புச் செய்தல்.

(4) உரிய நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பின்தங்கிய கிராமங்களில் வாழ்வாதார வழிமுறைகள் மற்றும் அடிப்படைத் தேவைகளை வலுவூட்டுவதற்கான நுன் நிதி வசதிகள் உள்ளடங்களாக புத்தெழுச்சிக்கான நிதி வசதிகள் முறையியலை அறிமுகம் செய்தல்.

(5) பயங்கரவாத செயற்பாடுகளுக்கு ஆளான கிராமப்புற பிரதேசங்களின் வீதிகள், நீர்ப்பாசனம், குடிநீர் வசதிகள், மின்சாரம், மருந்தகங்கள், ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்காக வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார புத்தெழுச்சிக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள சனாதிபதி செயலணியுடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

1.4 நிறுவன ஒங்கமைப்பு : பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு



1.5 அமைச்சின் கீழ் காணப்படும் நிறுவனங்கள்

1.5.1 **"இலங்கை ஹதபிம அதிகாரசபை"** (தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அதிகாரசபை)

1971 இன் 11 ஆம் இலக்க கமத்தொழில் கூட்டிணைத்தல் சட்டத்தின் கீழ் 1978 ஆம் ஆண்டின் தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை பிற்காலத்தில் இலங்கை ஹதபிம அதிகாரசபையாக மாறியது.

2020.10.06 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2196/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிதாக தாபிக்கப்பட்ட பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டுக் விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

அதற்கமைய, இந்த நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிரதான செயற்பணிகளாவன,

1. கமத்தொழில் பல்வகைப்படுத்தல், குடியிருப்பு அபிவிருத்தி, சம்பந்தப்பட்ட ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவத்துக்கான திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமைச்சரினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படுகின்ற பிரதேசங்களில் கூட்டுத்தாபனத்தினால் மேற்படி திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்யப்படுதல் மற்றும் அமுல்படுத்தப்படுதல்.

2. நிறுவனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அல்லது உரித்தாக்கப்பட்டுள்ள சகல காணிகளிலிருந்தும் உச்சளவான விளைச்சலைப் பெற்றுக் கொள்ளல். சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நீர் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தியை உறுதி செய்யும் குறிக்கோளை முகாமைத்துவம் செய்தல்.

3. கமத்தொழில் உற்பத்திகளை தயார் செய்தலும், விற்பனை செய்தலும்.

4. கமத்தொழில் பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அபிவிருத்திக்ககுத் தேவையான பொறிகளைத் தாபித்தல் மற்றும் அவற்றைப் பராமரிப்புச் செய்தலும் மற்றும் அமுல்படுத்தலும்

5. 1ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் கமத்தொழில் பல்வகைப்படுத்தல், குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவத்தை அமுல்படுத்தத் தேவையானதென கருதப்படுகின்ற சகல நடவடிக்கைகளையும் அமுல்படுத்தல்.

மேலுள்ள விடயங்கள் தொடர்பில் இந்த நிறுவனம் முக்கிய 11 பணிகளின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

1. மண் பாதுகாப்பு மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவம்
2. விவசாயிகளின் போசாக்கு நிகழ்ச்சித்திட்டம் / வீட்டுக் கோழிப்பண்ணை
3. மண் போசாக்கு நிகழ்ச்சித்திட்டம்
4. பசு வளர்ப்பு
5. மழைநீர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்
6. தேனீ வளர்ப்பு
7. வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை
8. பாடசாலை சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம்
9. கமத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
10. நீர் மூலங்களைப் பாதுகாத்தல்
11. சேதனப் பசளை நிகழ்ச்சித்திட்டம்

நோக்கு :

நிலைபேறான காணி மற்றும் இயற்கை வள முகாமைத்துவத்துக்கான சேவைசார் உச்ச நிலையில் பசுமையடைந்த சூழல் மற்றும் சிறந்த விளைச்சலைக் கொண்டதொரு நாடு

செயற்பணி :

விளைதிறன் மிக்க காணி முகாமைத்துவம், முறையான நீர் பாதுகாப்பு மற்றும் உயர் மனிதவளங்களைப் பயன்படுத்தி சூழல் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் விவசாய பொருளாதாரத்தை வலுவூட்டத் தேவையான பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்

இந்த நிறுவனத்தின் நிருவாக நடவடிக்கைகள் பின்வரும் பிரிவுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன.

- நிருவாகப் பிரிவு
- கருத்திட்டங்கள் மற்றும் திட்டமிடல் பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- சந்தைப்படுத்தல் பிரிவு
- நிதிப் பிரிவு

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 2021 ஆம் ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சானது, கமத்தொழில் அமைச்சுடன் இணைந்த புதிய இராஜாங்க அமைச்சாக 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 ஆம் திகதி தாபிக்கப்பட்டதுடன், அச்சந்தர்ப்பத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து முடிக்கப்பட்டிருந்ததனால் இந்த அமைச்சுக்குரிய விடயங்களின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

- இந்திய அரசின் கொடைகளின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் குறைந்த வருமானம் பெறுவோருக்கு துப்பரவேற்பாட்டு அலகுகள் 3400 ஐ நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டுக்காக வெளிநாட்டு நிதியம் ரூ.மி. 100 உம், உள்நாட்டு நிதியம் ரூ.மி. 100 உம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- 2021 ஆம் ஆண்டுக்கு வேறு ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமை காரணமாக அமைச்சின் விடயப்பரப்பு தொடர்பான விடயங்களின் கீழ் பின்வரும் கருத்திட்டப் பிரேரணைகள் தயார் செய்யப்பட்டு அங்கீகாரத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

<u>பயிர்ச் செய்கைக் கருத்திட்டங்கள்</u>

கருத்திட்டத்தின் பெயர்	உத்தேச தொகை ரூ.மி.
1. உள்நாட்டு மஞ்சள் உற்பத்தியை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்	**100.00**
2. உள்நாட்டு இஞ்சி உற்பத்தியை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்	**100.00**
3. உள்நாட்டு பாசிப்பயறு உற்பத்தியை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்	**30.00**
4. உள்நாட்டு உழுந்து உற்பத்தியை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்	**50.00**

<u>கால்நடை வளர்ப்பு கருத்திட்டங்கள்</u>

கருத்திட்டத்தின் பெயர்	உத்தேச தொகை ரூ.மி.
5. ஆடு வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம்	**100.00**

- இதற்கு மேலதிகமாக பயிர்செய்கைக் கருத்திட்டங்களுக்கு 2021 ஆம் ஆண்டுக்கு ஏற்பாடுகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு நெல் மற்றும் தானியம், உணவு, மரக்கறி, பழவகை, மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு பயிர்செய்கையை மேம்படுத்தல், விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சுக்கும் கருத்திட்டப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

  அதற்கமைய மேலுள்ளவாறு கருத்திட்டப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் 2021 ஆம் ஆண்டுக்கு இந்த அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் பற்றிய விபரம் பின்வருமாறாகும்.

✓ நெல் மற்றும் தானியம், உணவு, மரக்கறி, பழவகை, மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு உற்பத்தியை மேம்படுத்தல், விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சுச் செயலாளரின் SMA/P/01/26/2021 ஆம் இலக்க 2021.03.26 ஆம் திகதிய கடிதம் மூலம் பயிர்செய்கைக் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ரூ.மி. 50 ஆன ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

✓ வரவு செலவுத்திட்டப் பணிப்பாளர் நாயகத்தின் BD/RE/118/407/01/2020 ஆம் இலக்க **2021.03.29** ஆம் திகதிய கடிதம் மூலம் பயிர்செய்கைக் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூ.மி. 100 ஆன ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

✓ வரவு செலவுத்திட்டப் பணிப்பாளர் நாயகத்தின் BD/RE/118/407**/05**/2021 ஆம் இலக்க **2021.06.11** ஆம் திகதிய கடிதம் மூலம் ஆடு வளர்ப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ரூ.மி. 50 ஆன ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்கள் 30 வருட காலமாக யுத்த சூழலுக்கு முகம் கொடுத்ததன் காரணமாக அப்பிரதேசங்களின் சிக்கல்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. யுத்த சூழல் காரணமாக ஆற்றலுள்ள ஆட்கள் வெளிநாடுகளுக்கு மற்றும் நாட்டின் வேறு பிரதேசங்களுக்கு உயிர் பாதுகாப்புக் கருதி புலம்பெயர்ந்தும், இடம்பெயந்தும் உள்ளதுடன், அவ்வாறு செல்ல முடியாது போனவர்கள் யுத்த அழுத்தத்தைத் தாங்கிக் கொண்டு அநாதரவாக வாழ்ந்து

வந்துள்ளார்கள். எனவே விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பின்தங்கிய கிராமப் பிரதேசங்களை இலக்காகக் கொண்டு தாபிக்கப்பட்டுள்ள இந்த அமைச்சு அதற்கான விசேட கவனத்தை செலுத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியது.

அதற்கமைய, இந்த அமைச்சு மற்றும் இலங்கை ஹதபிம அதிகாரசபையினால் 2021.01.01 ஆம் திகதி முதல் 2021.12.31 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திடங்களின் முன்னேற்றம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2 பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு – 2021.01.01 முதல் 2021.12.31 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

I. உழுந்து மற்றும் பாசிப்பயறுப் பயிர்செய்கைக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்

(நெல் மற்றும் தானியம், உணவு, மரக்கறி, பழவகை, மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு உற்பத்தியை மேம்படுத்தல், விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சினால் ஒதுக்கப்பட்ட ரூ.மி. 50.00 ஆன ஏற்பாடுகளின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.)

மாவட்ட செயலாளரின் தலைமையின் கீழ் மாவட்ட கமத்தொழில் அலுவலர்கள் மற்றும் பிரதேச கமத்தொழில் அலுவலர்களினால் கருத்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள முறை பின்வருமாறாகும். கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை ரூ.மி. 49.271 ஆகும். பயனாளிகள் 8,568 பேருக்கு பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட விதைகளின் அளவு 57,773kg ஆகும் என்பதுடன், பயிர் செய்யப்பட்ட மொத்த காணிப்பகுதி 4,798 ஏக்கர்களாகும்.

- **உழுந்து மற்றும் பாசிப்பயிறுப் பயிர்செய்கைக் கருத்திட்டம் - முன்னேற்றம் 2021.12.31 ஆம் திகதிக்கு**

மாவட்டம்	பயிர்	ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி.	பயனாளிகளின் எண்ணிக்கை	பகிர்ந்தளிக்கப்பட்ட விதைகளின் அளவு (கி.கி.)	பயிர் செய்த நிலத்தின் அளவு (ஏக்கர்)	செலவிட்ட தொகை ரூ.மி. (விதை)	நிருவாக செலவினம் ரூ.மி.	மொத்த செலவினம் ரூ.மி.	உத்தேச விளைச்சல் (கி.கி.)
அம்பாறை	பாசிப்பயறு	3.00	311	3,732	311	2.8736	0.0974	4.9659	93,300
	உழுந்து	2.00	181	2,145	179	1.9948			53,625
	மாத்தம்	5.00	492	5,877	490	4.8684	0.0974	4.9659	
மட்டக்களப்பு	பாசிப்பயறு	11.00	1,966	13,560	1,130	10.7319	0.4085	20.8348	339,000
	உழுந்து	10.00	1,435	10,749	896	9.6944			266,400
	மாத்தம்	21.00	3401	24,309	2,026	20.4263	0.4085	20.8348	
திருகோணமலை	பாசிப்பயறு	3.00	626	3,735	311	2.8760	0.0957	4.8829	140,17 5
	உழுந்து	2.00	404	2,055	172	1.9112			48,020
	மொத்தம்	5.00	1,030	5,790	482	4.7872	0.0957	4.8829	
வவுனியா	பாசிப்பயறு	2.00	325	2,181	182	1.7666	0.0735	3.7482	72,700
	உழுந்து	2.00	441	2,152	179	1.9081			80,663
	மொத்தம்	4.00	766	4 ,333	361	3.6747	0.0735	3.7482	
மன்னார்	பாசிப்பயறு	2.00	199	2,376	198	1.9246	0.0589	2.9104	59,400
	உழுந்து	1.00	86	1,032	86	0.9288			25,800
	மொத்தம்	3.00	285	3,408	284	2.8534	0.0589	2.9104	
கிளிநொச்சி	பாசிப்பயறு	2.00	455	2,469	206	1.9999	0.0782	3.9894	67,320
	உழுந்து	2.00	428	2,125	179	1.9114			64,410
	மொத்தம்	4.00	883	4,594	386	3.9113	0.0782	3.9894	
முல்லைத்தீவு	பாசிப்பயறு	2.00	374	2,469	205	1.9999	0.0782	3.9894	61,575
	உழுந்து	2.00	321	2,152	179	1.9114			53,805
	மொத்தம்	4.00	695	4,621	382	3.9113	0.0782	3.9894	
யாழ்ப்பாணம்	பாசிப்பயறு	2.00	478	2,469	206	1.9999	0.0774	3.9895	74,700
	உழுந்து	2.00	538	2,152	179	1.8722			86,000
	மொத்தம்	4.00	1,016	4,621	386	3.8721	0.0774	3.9895	
முழு மொத்தம்	பாசிப்பயறு	27.00	4,734	32,991	2,749	26.1724			908,170
	உழுந்து	23.00	3,834	24,562	2,049	22.1323			678,723
	மொத்தம்	50.00	8,568	57,553	4,798	48.3047	0.9660	49.2707	1,586,893

II. உழுந்து, பாசிப்பயிறு மற்றும் இஞ்சிப் பயிர்செய்கைக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்

(தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட ரூ.மி. 100.00 ஆன ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.)

மாவட்ட செயலாளரின் தலைமையின் கீழ் மாவட்ட கமத்தொழில் அலுவலர்கள் மற்றும் பிரதேச கமத்தொழில் அலுவலர்களினால் கருத்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள முறை பின்வருமாறாகும். கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை ரூ.மி. 89.264 ஆகும். பயனாளிகள் 15,881 பேருக்கு பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட விதைகளின் அளவு 120,672 Kg ஆகும் என்பதுடன், பயிர் செய்யப்பட்ட மொத்த காணிப்பகுதி 6,474 ஏக்கர்களாகும்.

- **உழுந்து, பாசிப்பயறு மற்றும் இஞ்சிப் பயிர்செய்கைக் கருத்திட்டம் - முன்னேற்றம் 2021.12.31 ஆம் திகதிக்கு**

#	மாவட்டம்	பயிர்	ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி.	திருத்திய ஏற்பாடு (ரூ.மி.)	பயனாளிகளின் எண்ணிக்கை	பகிர்ந்தளிக்கப்பட்ட விதைகளின் அளவு (கி.கி.)	பயிர் செய்த நிலத்தின் அளவு (ஏக்கர்)	செலவிட்ட தொகை ரூ.மி. (விதை)	நிருவாக செலவினம் ரூ.மி.	மொத்த செலவினம் ரூ.மி.	உத்தேச விளைச்சல் (கி.கி.)
1.	மட்டக்களப்பு	இஞ்சி	15.0000	15.0000	1,859	24,010	52	14.4060	0.2422	14.6482	144,060
		உழுந்து	5.0000	5.0000	760	3,000	445	4.8879	0.0975	4.9854	133,425
		பாசிப்பயறு	5.0000	5.0000	830	6,048	504	4.8989	0.0968	4.9957	151,200
		மொத்தம்	**25.0000**	**25.0000**	**3,449**	**33,058**	**1,001**	**24.1928**	**0.4365**	**24.6293**	**428,685**
2.	அம்பாறை	இஞ்சி	2.0000	-	-	-	-	-	-	-	-
		உழுந்து	2.0000	6.8703	603	7,236	603	6.7295	0.1171	6.8466	53,625
		பாசிப்பயறு	2.0000	6.3511	640	7,680	640	6.2208	0.1244	6.3452	93,300
		மொத்தம்	**6.0000**	**13.2214**	**1,243**	**14,916**	**1,243**	**12.9503**	**0.2415**	**13.1918**	**146,925**
3.	திருகோணமலை	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	2.5000	514	2,640	220	2.4548	0.0758	3.9967	
		பாசிப்பயறு	1.5000	1.5000	283	1,810	151	1.4661			
		மொத்தம்	**4.0000**	**4.0000**	**797**	**4,450**	**371**	**3.9209**	**0.0758**	**3.9967**	
4.	அநுராதபுரம்	இஞ்சி	1.0000	1.0000	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	3.5000	456	3,070	255	2.8553	0.0733	4.0087	85,295
		பாசிப்பயறு	1.5000	1.5000	223	1,334	111	1.0801			66,675
		மொத்தம்	**4.0000**	**6.0000**	**679**	**4,404**	**366**	**3.9354**	**0.0733**	**4.0087**	**151,970**
5.	பொலன்னறுவை	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	4.0000	463	3,450	287	3.2085	0.0351	3.2436	
		பாசிப்பயறு	1.5000	-	-	-	-	-	-	-	
		மொத்தம்	**4.0000**	**4.0000**	**463**	**3,450**	**287**	**3.2085**	**0.0351**	**3.2436**	
6.	குருநாகல்	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.0000	1.3660	450	1,440	180	1.3392	0.0233	1.3625	108,000
		பாசிப்பயறு	1.0000	1.6326	830	1,976	247	1.6006	0.0274	1.6280	148,200
		மொத்தம்	**3.0000**	**2.9986**	**1,280**	**3,416**	**427**	**2.9398**	**0.0507**	**2.9905**	**256,200**
7.	புத்தளம்	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	2.5000	299	1,605	136	1.4948	0.0597	3.0423	50,996
		பாசிப்பயறு	1.5000	1.5000	395	1,834	152	1.4878			57,277
		மொத்தம்	**4.0000**	**4.0000**	**694**	**3,439**	**288**	**2.9826**	**0.0597**	**3.0423**	**108,273**
8.	யாழ்ப்பாணம்	இஞ்சி	1.0000	1.0000	111	2,674	7	0.9795	0.0200	0.9995	
		உழுந்து	1.5000	3.0000	903	3,118	260	2.9393	0.0588	2.9981	124,720
		பாசிப்பயறு	1.5000	-	-	-	-	-	-	-	
		மொத்தம்	**4.0000**	**4.0000**	**1,014**	**5,792**	**267**	**3.9188**	**0.0788**	**3.9976**	**124,720**
9.	வவுனியா	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	7.9368	1,638	8,364	697	7.7785	0.1480	7.9265	313,650
		பாசிப்பயறு	1.5000	0.0632	11	78	6	0.0632	0.0013	0.0645	2,600
		மொத்தம்	**4.0000**	**8.0000**	**1,649**	**8,442**	**703**	**7.8417**	**0.1493**	**7.9910**	**316,250**
10.	முல்லைத்தீவு	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	1.5000	201	1,476	123	1.2841	0.0693	3.4991	
		பாசிப்பயறு	1.5000	2.0000	475	2,649	221	2.1457			
		மொத்தம்	**4.0000**	**3.5000**	**676**	**4,125**	**344**	**3.4298**	0.0693	**3.4991**	

11.	கிளிநொச்சி	இஞ்சி	1.0000	0.9988	141	1,456	3	0.6552			12,850
		உழுந்து	1.5000	2.4088	411	2,916	243	2.3616	0.0536	3.6512	88,820
		பாசிப்பயறு	1.5000	0.5924	94	717	60	0.5808			18,970
		மொத்தம்	**4.0000**	**4.0000**	**646**	**5,089**	**306**	**3.5976**	**0.0536**	**3.6512**	**120,640**
12.	மன்னார்	இஞ்சி	-	-	-	-	-	-	-	-	
		உழுந்து	-	2.0000	177	2,100	175	1.9530	0.0391	1.9921	
		பாசிப்பயறு	-	2.0000	208	2,340	195	1.8954	0.0379	1.9333	
		மொத்தம்	-	**4.0000**	**385**	**4,440**	**370**	**3.8484**	**0.0770**	**3.9254**	
13.	ஹம்பாந்தோட்டை	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.0000	0.4610	44	486	41	0.4520	0.0082	0.4602	
		பாசிப்பயறு	1.0000	-	-	-	-	-	-	-	
		மொத்தம்	**3.0000**	**0.4610**	**44**	**486**	**41**	**0.4520**	**0.0082**	**0.4602**	
14.	பதுளை	இஞ்சி	1.0000	2.3892	229	5,895	13	1.3305	-	1.3305	58,900
		உழுந்து	1.0000	0.3054	-	-	-	-	-	-	
		பாசிப்பயறு	1.0000	0.3054	-	-	-	-	-	-	
		மொத்தம்	**3.0000**	**3.0000**	**229**	**5,895**	**13**	**1.3305**	**-**	**1.3305**	**58,900**
15.	மொனராகலை	இஞ்சி	1.0000	1.0000	89	2,500	6	1.1875			46,280
		உழுந்து	1.5000	1.5000	126	1,325	126	1.2323	0.0879	3.9171	172,800
		பாசிப்பயறு	1.5000	1.5000	144	1,740	144	1.4094			118,440
		மொத்தம்	**4.0000**	**4.0000**	**359**	**5,565**	**276**	**3.8292**	**0.0879**	**3.9171**	**337,520**
16.	கண்டி	இஞ்சி	2.0000	3.0000	1,000	8,272	19	2.9400			
		உழுந்து	1.0000	-	-	-	-	-	0.0617	3.5577	
		பாசிப்பயறு	1.0000	1.0000	293	1,112	142	0.5560			
		மொத்தம்	**4.0000**	**4.0000**	**1,293**	**9,384**	**161**	**3.4960**	0.0617	**3.5577**	
17.	நுவரெலியா	இஞ்சி	1.0000	2.0000	981	4,321	10	1.8148	0.0171	1.8320	43,210
		உழுந்து	1.0000	-	-	-	-	-	-	-	
		பாசிப்பயறு	1.0000	-	-	-	-	-	-	-	
		மொத்தம்	**3.0000**	**2.0000**	**981**	**4,321**	**10**	**1.8148**	**0.0171**	**1.8320**	**43,210**
18.	களுத்துறை*	இஞ்சி	2.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	-	-	-	-	-	-	-	
		பாசிப்பயறு	1.5000	-	-	-	-	-	-	-	
		மொத்தம்	**5.0000**	-	-	-	-	-	-	-	
19.	கேகாலை*	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	-	-	-	-	-	-	-	
		பாசிப்பயறு	1.5000	-	-	-	-	-	-	-	
		மொத்தம்	**4.0000**	-	-	-	-	-	-	-	
20.	காலி*	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	-	-	-	-	-	-	-	
		பாசிப்பயறு	1.5000	-	-	-	-	-	-	-	
		மொத்தம்	**4.0000**	-	-	-	-	-	-	-	
21.	மாத்தறை*	இஞ்சி	1.0000	-	-	-	-	-	-	-	
		உழுந்து	1.5000	-	-	-	-	-	-	-	
		பாசிப்பயறு	1.5000	-	-	-	-	-	-	-	
		மொத்தம்	**4.0000**	-	-	-	-	-	-	-	
	எஞ்சிய ஏற்பாடு			**3.8176**							
		இஞ்சி	**37.0000**	**26.3879**	**4,410**	**49,128**	**110**	**23.3135**			**305,300**
		உழுந்து	**31.5000**	**44.8484**	**7,045**	**42,226**	**3,791**	**40.9708**	**1.5755**	**89.2646**	**1,131,331**
		பாசிப்பயறு	**31.5000**	**24.9446**	**4,426**	**29,318**	**2,573**	**23.4048**			**656,662**
		மொத்தம்	**100.0000**	**99.9985**	**15,881**	**120,672**	**6,474**	**87.6891**	**1.5755**	**89.2646**	**2,093,293**

* இந்த மாவட்டங்களில் குறித்த பயிர்செய்கையை அமுல்படுத்துவது, அங்கீகரிக்கப்பட்ட கால எல்லைகளில் கடினமாகும் என அறியத்தரப்பட்டுள்ளதனால் ஏற்பாடுகள் வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டன.

கருத்திட்டத்துக்கான மொத்த செலவினம் ரூ.மி. 89.26 ஆகும். 2021.12.31 ஆம் திகதிக்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.மி. 64.7 மற்றும் செலுத்த வேண்டிய கையிலுள்ள பட்டியல்களின் பெறுமதி ரூ.மி. 24.56 ஆகும்.

iii. ஆடு வளர்ப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்

(தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்ட ரூ.மி. 50.00 ஆன ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.)

மாவட்ட செயலாளரின் தலைமையின் கீழ் மாவட்ட கால்நடை வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச கால்நடை வைத்திய உத்தியோகத்தர்களினால் கருத்திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள முறை மற்றும் கருத்திட்டத்தின் முன்னேற்றம் பின்வருமாறாகும். கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை ரூ.மி. 40.143 ஆகும். இக்கருத்திட்டமானது 09 மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 1,356 பேர் ஆகும். பகிர்ந்தளிக்கப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை 2,729 ஆகும்.

- **ஆடு வளர்ப்பு கருத்திட்டம் - முன்னேற்றம் 2021.12.31 ஆம் திகதிக்கு**

மாவட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி.	பயனாளிகளின் எண்ணிக்கை	பகிர்ந்தளித்த ஆடுகளின் எண்ணிக்கை	கொள்வனவு செலவினம் ரூ.மி.	நிருவாக செலவினம் ரூ.மி.	செலவிட்ட தொகை ரூ.மி.
அம்பாறை	5.00	154	308	4.5521	0.0142	4.5663
மட்டக்களப்பு	20.00	662	1,351	19.4548	0.4090	19.8638
திருகோணமலை	5.00	175	350	4.6382	0.3601	4.9983
பொலன்னறுவை	5.00	164	328	4.9155	0.0516	4.9671
கம்பஹா	10.00	114	228	3.4200	0.0249	3.4449
பதுளை	1.00	18	36	0.5363	-	0.5363
கேகாலை	1.00	24	48	0.7200	0.0176	0.7376
கண்டி	1.00	32	54	0.8994	-	0.8994
நுவரெலியா	2.00	13	26	0.3900	0.0100	0.4000
மொத்தம்	**50.00**	**1,356**	**2729**	**39.5263**	**0.8874**	**40.4137**

- கருத்திட்டத்துக்கான மொத்த செலவினம் ரூ.மி. 40.41 ஆகும். 2021.12.31 ஆம் திகதிக்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.மி. 36.72 மற்றும் செலுத்த வேண்டிய கையிலுள்ள பட்டியல்களின் பெறுமதி ரூ.மி. 3.69 ஆகும்.

iv மட்டக்களப்பு மாவட்டத்தின் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்திய அரசின் கொடைகளின் கீழ் துப்பரவேற்பாட்டு அலகுகள் 3,400 ஐ நிர்மாணித்தல்

இலங்கை அரசு மற்றும் இந்திய அரசுக்கு இடையிலான நட்புறவை வலியுறுத்தல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு உறவுகளின் எதிர்கால அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கும் நோக்கத்தை முன்னிறுத்தி, இந்திய அரசினால் பல்வேறு கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதன் மூலம் இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் சுகாதாரத் துறையின் முன்னேற்றத்திற்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய 2018.05.01 ஆம் திகதிய அமைச்சரவை திருத்தத்திற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்த கிராம பொருளாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விசேட கோரிக்கைக்கு அமைய, மட்டக்களப்பு மாவட்டத்தின் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக பிரதேச செயலாளர் பிரிவுகள் 14 ஐ உள்ளடக்கும் வகையில் துப்பரவேற்பாட்டு அலகுகள் 3,400 ஐ நிர்மாணிக்க ரூ.மி. 300 ஆன நிதிக் கொடையை பெற்றுக் கொடுக்க இந்திய அரசு இணங்கியது. இக்கருத்திட்டத்தின் மூலம் பிரதானமாக இனங்காணப்பட்ட குடும்ப அலகுகள் 3,400 இன் துப்பரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்த எதிர்பார்ப்பதுடன், அதன் மூலம் பாதகமான சுகாதார சிக்கல்கள் மற்றும் வறுமை மட்டத்தை குறைப்பதற்கு உதவ முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு, தேசிய திட்டமிடல் திணைக்களம் சிபாரிசு செய்துள்ளது.

கருத்திட்டத்திற்கான பெறுமதி சேர்வரி **(VAT),** தீர்வை வரி, துறைமுகங்கள் மற்றும் இறக்குமதிவரி போன்றன மற்றும் இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதுடன் இணைந்துள்ள ஏனைய நிதிசார் வரிகளை இலங்கை அரசு தாங்கிக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், பெறுகைக்கான சகல செலவினங்களும், சேவை வழங்கல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணையை மிகைக்கும் மேலதிக உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதும் இலங்கை அரசின் பொறுப்பாகும்.

இக்கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றத்தின் பொழிப்பு பின்வருமாறாகும்.

- கருத்திட்டதை அமுல்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் 2018.07.03 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. இலங்கை மற்றும் இந்திய அரசுக்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை 2018.07.19 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டது.

- கருத்திட்டத்திற்கு ஆலோசானை சேவை நிறுவனமொன்று (Project Consultancy Service Institution) தெரிவு செய்துகொள்ளப்பட்டதுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் நியமனம் செய்யப்பட்டது.

- **2020.10.06** ஆம் திகதி இந்த அமைச்சு தாபிக்கப்பட்ட பின்னர் இந்த அமைச்சின் கீழ் அமுல்படுத்த இக்கருத்திட்டம் உள்ளடக்கப்பட்டது.

- கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை உள்ளடக்கிய **2020/02** ஆம் இலக்க **2020.12.21** ஆம் திகதிய சுற்றறிக்கை மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் மற்றும் மேற்படி மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் 14 பேருக்கு விடுக்கப்பட்டது.

- நிர்மாண நடவடிக்கைகளுக்கு உகந்த நிறுவனங்களை தெரிவு செய்துகொள்வதற்கு விலை மனுக் கோரப்பட்டதை அடுத்து, தொழில்நுட்ப பிரேரணைகளை மதிப்பீடு செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. 2020.12.31 ஆம் திகதி நிதிப் பிரேரணைகள் திறக்கப்பட்டதுடன், மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆரம்ப மதிப்பீடுகளின் விலைமனுக்களுக்கு அமைய இன்று காணப்படுகின்ற விலைகளுக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ள முடியாமையினால் கருத்திட்டத்தை அமுல்படுத்த முடியவில்லை.

- இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் இக்கருத்திட்டத்திற்கு தயார் செய்யப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை திருத்தியமைக்க 2021.04.27 ஆம் திகதியைக் கொண்டதாக தயார் செய்யப்பட்ட வரைவு இந்த அமைச்சுக்கு 2021.04.30 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் 03 வருட உடன்படிக்கைக் காலஎல்லை 2021.07.18 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதனால் உடன்படிக்கை திருத்தம் செய்யப்படவுள்ளது.

- துப்பரவேற்பாட்டு அலகுக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு அமைய, இன்றைய விலைகளுக்கு ஏற்பட நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமை காரணமாக மீணடும் மதிப்பீடுகளை தயார் செய்து நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், துப்பரவேற்பாட்டு அலகுகள் 3200 இற்கு மேற்பட்ட பயனாளிகளின் ஆவணங்களை திருத்தம் செய்யுமாறும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் 2021.12.08 ஆம் திகதிய கடிதம் மூலம் அறியத்தந்துள்ளது. உடன்படிக்கை திருத்தம் செய்யப்பட்ட பின்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

v. "கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு" இராஜாங்க அமைச்சின் பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் தலைமையில அமுல்படுத்தப்பட்டுள்ள "கிராமத்துடன் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டத்தின்" கீழ் தெரிவு செய்யப்பட்ட கிராமப் பிரதேசங்கள் காணப்படின், இந்த அமைச்சின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பயனாளிகளைத் தெரிவு செய்துகொள்ளும் போது மேற்படி கிராமப் பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறித்த மாவட்ட செயலாளர்களை அறிவுறுத்தி தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை ஹதபிம அதிகாரசபை - 2021.01.01 முதல் 2021.12.31 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்

2021 ஆம் ஆண்டுக்கு இந்த நிறுவனத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.மி. 100 ஆகும். இந்நிதியைப் பயன்படுத்தி அமுல்படுத்தும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

2021.12.31 ஆம் திகதிக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - இலங்கை ஹதபிம அதிகாரசபை

	விடயப்பரப்பு	செயற்பாடு		ஒதுக்கப்பட்ட தொகை	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்	
					நிதி ரூ.	பௌதீக
1.	காணிகளின் விளைதிறனை உச்ச மட்டத்திற்குக் கொண்டுவருதல்	1.	மண் பாதுகாப்புக் கட்டமைப்பை தாபித்தல்- 2020	8,150,200	8,146,200	2020 ஆண்டு பூர்த்தி செய்யப்பட்ட ஹெக்ரயார் அளவு 814.62 ஆகும்.
			மண் பாதுகாப்புக் கட்டமைப்பை தாபித்தல்- 2021	23,700,000	23,698,846	2021 ஆண்டில் ஹெக்டயர் 1112.77 அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன் 948 ஹெக்ரயருக்கு நிதி செலுத்தப்பட்டதுடன், மேலும் 164.77 இற்கு செலுத்த வேண்டியுள்ளது.
		1.	சேதனப் பசளை உற்பத்தி - 2020	10,441,944	10,441,944	2020 ம் ஆண்டின் தொடர்ச்சியான செலவின் கீழ் விவசாயிகள் 2584 பேருக்கு தேவையான உபகரணத் தொகுதியை வழங்கியமை
			சேதனப் பசளை உற்பத்தி - 2021	32,084,168	32,084,168	கண்டி, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை மாவட்ட விவசாயிகள் முறையே 1,700, 6,303 மற்றும் 93 பேருக்கு விவசாய உபகரணங்களை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்திடம் கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் விவசாயிகள் 651 பேருக்கு உபகரணம் வழங்கப்படவுள்ளது.
		1.	தொழில்நுட்பப் பயிற்சி	160,723	160,714	விவசாயிகள் 4291 பேருக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.
2	முன் தொடர்பு ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவம்	2.	நீரேந்து பரப்புகள் மற்றும் நீரோடைகளை பாதுகாத்தல்	4,267,000	4,251,778	18 நீரேந்து பரப்புகள் பாதுகாக்கப்பட்டன. (விபரம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.)
3	விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்	3.	பண்ணை அபிவிருத்தி பல்லேகெலே	252,000	251,335	நீர் மோட்டாரை கொள்வனவு செய்தல்,
		3.	பண்ணை அபிவிருத்தி கொத்மலே	470,000	469,975	நான்கு சக்கர டிரக்டர்களுக்கு ஒரு தட்டை கொள்வனவு செய்தல் (trailor)
		3.	பல்வகை வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டம் - 01	8,463,500	8,463,328	பூ நாற்றுமேடை / பூச்சாடி தயார் செய்தல் / மரக்கறி நாற்றுமேடை/ காலான் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சேதனப் பசளை உற்பத்திக்கு கோரப்பட்டுள்ள விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
		3.	பல்வகை வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டம் - 2 பகுதியளவிலான வீட்டுகோழி வளர்ப்பை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்	6,847,500	6,847,500	கண்டி மாவட்ட விவசாய குடும்பங்கள் 1826 இற்கு கோழிக் குஞ்சுகள் 18260 வழங்கப்பட்டன.
	உபமொத்தம்			94,837,035	94,815,788	

2021.12.31 ஆம் திகதிக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - இலங்கை ஹதபிம அதிகாரசபை

	விடயப்பரப்பு	செயற்பாடு		ஒதுக்கப்பட்ட தொகை	2021.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம்	
					நிதி ரூ.	பௌதீக
4.	சமுதாய நலன்புரி மற்றும் தாபன நடவடிக்கைகள்	4.1	இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்	535,000	533,930	மலையக வானொலிச் சேவையில் ‘‘ஹதபிம கெமி சரணி’’ நேரடி வானொலி நிகழ்ச்சிகள் 10 உம், ‘‘ஹதபிமென் கொவிபிமட’’ வானொலி நிகழ்ச்சிகள் 20 நடாத்தப்பட்டன..
		4.2	மாதாந்த முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்	183,800	183,800	முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் 07 நடாத்தப்பட்டன.
		4.3	பௌதீக வள அபிவிருத்தி	4,405,930	4,399,040	அலுவலகத்திற்கு தேவையான பௌதீக வளங்களை கொள்வனவு செய்ய செலவிடப்பட்டது.
		4.4	கருத்திட்ட நடவடிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள்	38,235	35,315	கருத்திட்ட நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்டது.
	உப மொத்தம்			5,162,965	5,152,085	
	மொத்தம்			100,000,000	99,967,873	

2021 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான நீரேந்து பரப்புக்கள் - இலங்கை ஹதபிம அதிகாரசபை

மாவட்டம்		பிரதேச செயலாளர் பிரிவு	கிராம அலுவலர் பிரிவு	நீரேந்த பரப்பின் பெயர்
கண்டி	1.	பஸ்பாகே கோரளே	தடுபெந்திருப்ப	சோலகந்த புதிய கிராமம்
	2.	கங்க இஹள கோரளே	பெல்லபிட்டிய வடக்கு	லெச்சம் பிஹில்ல
	3.	உடபளாத	துனுகேஉல்ல	போமன் குடியிருப்பு நீரூற்று
	4.	தொலுவ	புபுரெஸ்ஸ	யெரோ ஹதபிம வாவி நீரூற்று
	5.	தெல்தோட்டை	பேரவத்த கிழக்கு	ஹபுவெல்மான கால்வாய் பன்சலைக்கு அருகே சிறு நீர்வீழ்ச்சி
	6.	பாதஹேவாஹெட்ட	ஸ்ரீயாகம	அம்பலமான நரேந்துபரப்பு பேணல்
	7.	ஹாரிஸ்பத்துவ	சீவலீகந்த	கெட்டபொத்த சிறு நீர் வீழ்ச்சி
	8.	கலகெதர	பல்லேகொட்டவ	வளவே கும்புற யாய சிறு நீர் வீழ்ச்சி
	9.	பூஜாபிட்டிய	தொலபிஹில்ல தெற்கு	ஈரியகஹதெனிய சிறு நீர்வீழ்ச்சி
	10.	உடுநுவர	இனங்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	
	11.	யடிநுவர	மொரகொல்ல	மொரகஹஹஎலெ சிறு நீர்வீழ்ச்சி பேணப்பட்ட பகுதி
	12.	ஹதரலியத்த	வல்பலாகொல்ல	போலகல கிணறு பேணப்பட்ட பகுதி
	13.	பாததும்பர	குணெம்பில்ல	நல்லதண்ணி நீரேந்துபரப்பு
	14.	பன்வில்	மடொல்கெலே	இல. 09 இல் அமைந்துள்ள நீர்மூலம்
	15.	குண்டசாலை	ஹீபிட்டிய	மஹீபிட்டிய சிறு நீர் வீழ்ச்சி வயல் நீர்மூலம்
	16.	மெததும்பர	தகுன தொர லியத்த	ஹீல்ல நீர்மூலம்
	17.	உடுதும்பர	போப்பிட்டிய	போப்பிட்டிய நீர்மூலம்
	18.	மினிபே	வெல்லகஹவாடிய	மேற்கு வராகொல்ல வனப் பேணல் பிரதேசம்

மேலுள்ள கருத்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் உள்ளடக்கப்படும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையின் நோக்கங்கள் பின்வருமாறாகும்.

- உலர் மிளகாய், சோளம், சோயா, பாசிப்பயறு, கௌப்பி, வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு போன்ற பயிர்செய்கைகளுக்கான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தி மேற்படி பொருட்கள் இறக்குமதிக்கு செலவாகும் டொ.மி. 500 இற்கும் மேற்படி அந்நியச் செலாவணியை மேற்படி பயிர்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளின் வருமானமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்தல்.
- வட பிரதேசங்களில் விவசாய உற்பத்தியை ஊக்குவித்து தற்போது இறக்குமதி செய்ய செலவாகும் அ.டொ. ஒரு பில்லியனுக்கும் அதிகமான அந்நியச் செலாவணியை விவசாயிகளின் வருமானமாக மாற்ற நடவடிக்கை எடுத்தல்.
- உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய விவசாய உற்பத்திகளை இறக்குமதி செய்வதை உச்சளவாக மட்டுப்படுத்தல்.
- 2025 ஆம் ஆண்டளவில் மேற்படி உற்பத்திகள் மூலம் நாடு தன்னிறைவடைதல்.
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பயிர்களை இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி செய்வதை நிறுத்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்திகளை ஊக்குவிப்பதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- நிலைபேறான சுற்றாடல் கொள்கையின் கீழ் மண்அரிப்பு, மண்சரிவு மண் உலர்வடைவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் மேற்படி நிலங்கள் மற்றும் கைவிடப்பட்டுள்ள நிலப்பகுதிகளில் விவசாய பயிர் செய்கையை மேற்கொள்ளல்.
- மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தின் கீழ் சேதனப் பசளை உற்பத்தியை பிரபல்யப்படுத்தல் மற்றும் நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேம்படுத்தல், பாரம்பரிய விவசாய கிராமங்களை சேதனப் பயிர்செய்கை உற்பத்தியில் ஈடுபடுத்தல்.
- மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தின் கீழ் குறை அபிவிருத்திக் காணிகளின் விளைதிறனை மேம்படுத்தல்
- நிலைபேறான சுற்றாடல் கொள்கையின் கீழ் காணிப் பயன்பாட்டுக் கொள்கை மற்றும் நீர் முகாமைத்துவக் கொள்கையின் நிலைபேறான தன்மையை உறுதி செய்வதும், வனப் பயிர்செய்கைகளை மீண்டும் மேற்கொள்வதும், இயற்கை சுற்றாடல் முறைமையை பாதுகாப்பதும்.
- நிலைபேறான சுற்றாடல் கொள்கையின் கீழ் சுற்றாடல் கற்கை வனப் பாதுகாப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் மண் பாதுகாப்பு போன்ற சுற்றாடல் வகைப்பொறுப்பாதல் பற்றி மக்களை அறிவுறுத்தல்.

பின்தங்கிய கிராமப் பிரதேங்களில் வாழும் குறைந்த வசதிகளைக் கொண்ட மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக அமைச்சு மற்றும் இலங்கை ஹதபிம அதிகாரசபையினால் கருத்திட்டப் பிரேரணைகள் தயார் செய்யப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதன் போது அமைச்சினால் மஞ்சள், இஞ்சி, உழுந்து, பாசிப்பயறு, உள்நாட்டு கிழங்கு வகைகள் மற்றும் கலப்பின தாவரப் பயிர்செய்கைக் கருத்திட்டங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பின் கீழ் ஆடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்புக் கருத்திட்டப் பிரேரணைகள் மற்றும் வடக்கு கிழக்கு பிரதேச மங்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான கருத்திட்டப் பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. இலங்கை ஹதபிம அதிகாரசபையினால் கிராமிய சமுதாயத்தினர் மத்தியில் பகுதியளவிலான வீடுசார் கோழி வளர்ப்பை பிரபல்யப்படுத்தல், விவசாய சங்கங்களை ஒன்றிணைத்து சேதனப் பசளை உற்பத்தி அலகுகளைத் தாபித்தல், மத்திய நாற்றுமேடைகள் 331 ஐ தாபித்தல், கொத்மலே பண்ணையை நவீனமயப்படுத்தல், பல்லேகெலே பண்ணையில் கோழி இனப்பெருக்க கொள்ளளவை மேம்படுத்தல், பல்லேகெலே பண்ணையை நவீனமயப்படுத்தல் மற்றும் உள்நாட்டு கிழங்கு வகைகள், நிரந்தர பயிர்கள், மஞ்சள் மற்றும் இஞ்சி பயிர்செய்கையை பிரபல்யப்படுத்தல் ஆகிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

அதற்கமைய அடுத்துவரும் ஆண்டுகளில் அமைச்சுக்கு அங்கீகரிக்கப்படும் மூலதன ஏற்பாடுகளைப் பயன்படுத்தி விவசாயத் துறைகளுக்கான கருத்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் மேற்படி உற்பத்திகளால் நாட்டின் தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்கும், பின்னடைவான பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

.....
செயலாளர்
பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

Dr. AMAL HARSHA DE SILVA
Secretary
State Ministry of Backward Rural Areas
Development and promotion of domestic
Animal Husbandry & Minor Economic Crop Cultivation
Postal Headquarters Building
310, D.R. Wijewardana Mawatha, Colombo 10

14

அத்தியாயம் 03. - 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

3.1 நிதிசார் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		160,162,000	213,137,903	ஏசீஏ-3
-	வைப்புகள்		1,431,038	5,246,337	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		7,542,090	4,564,099	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	4,689,087	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**169,135,129**	**227,637,426**	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**169,135,129**	**227,637,426**	
-	**திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)**		**216**	-	
-	**தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)**		**169,134,913**	**227,637,426**	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
68,900,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	61,777,682	9,384,274	
39,645,600	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	34,840,329	13,429,883	ஏசீஏ-2(ii)
111,000,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	94,874,668	100,425,275	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
219,545,600	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**191,492,679**	**123,239,432**	
	மூலதனம் செலவினம்				
11,070,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	7,996,296	1,015,038	
5,870,800	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	5,861,280	4,234,036	
450,000,000	மூலதன மாற்றல்கள்	12	201,452,070	46,116,505	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,336,600	திறன் விருத்தி	14	819,500	-	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	
468,277,400	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**216,129,146**	**51,365,579**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		**1,635,578**	6,146,032	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		**5,754,328**	18,121,264	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**7,389,906**	**24,267,296**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		**415,011,731**	**198,872,307**	
-	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		**(245,876,819)**	**28,765,119**	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(245,876,819)		ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3
			(245,876,819)		

1

3.3. நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	183,732,893	231,175,078
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	11,769,403	13,557,165
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	100,013
மொத்த சொத்துக்கள்		**195,502,296**	**244,832,256**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(13,834,755)	(12,251,532)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		183,732,893	231,175,078
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	25,604,158	25,808,697
நீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	100,013
மொத்தப் பொறுப்புக்கள்		**195,502,296**	**244,832,256**

பக்க இலக்கம் ...8.... முதல் ....54.... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் ...55.... முதல் ..62... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

